


இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சென்னப்பள்ளியில் ரூ.26.82 கோடி மதிப்பீட்டில் 10 ஏக்கர் பரப்பளவில் உணவுப் பொருட்களை பதப்படுத்தும் குளிர் பதனக்கிடங்கு அமைக்கும் பணிகளை ஆய்வு செய்தார். அதுபோது உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., டி.மதியழகன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ.செல்வக்குமார் மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையின் அரசு செயலர், மாவட்ட ஆட்சியர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.





கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயக்கத்தை வளர்த்த கழக மூத்த முன்னோடிகள் 1,750 பேருக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் – தலா ரூ.10,000 பொற்கிழி வழங்கினார். இதில் அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் டி.மதியழகன் எம்.எல்.ஏ., தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., முன்னாள் மாவட்டச் செயலாளர் டி.செங்குட்டுவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பல்வேறு துறைகளின் கீழ் 3,642 பயனாளிகளுக்கு 42 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான டிராக்டர் இயந்திரங்கள், அதி திறன் மின் மோட்டார்கள், மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் செய்ய ஆவின் பாலகம், தொலைபேசி போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக கிருஷ்ணகிரி நகருக்கு வருகை தந்தபோது கழகத்தினர், பொதுமக்கள் சாலையின் இருமருங்கிலும் திரண்டு சிறப்பான வரவேற்பளித்தனர்.